

இன்று (08.10.2017) நன்மங்கலத்தில் உள்ள தமிழ்நாடு பல்லுயிர் பசுமையாக்குதல் திட்ட அலுவலகத்தில், வன உயிரின வார நிறைவு விழா நடைபெற்றது. மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி விழா பேருரையாற்றினார்கள். மாநிலங்களவை உறுப்பினர்களான திருமதி. மரகதம் குமரவேல் எம்.பி. அவர்கள், திரு. கே என்,ராமச்சந்திரன், எம்.பி. அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ. ஜெயவர்தன், எம்.பி. அவர்கள், திரு.சிட்லபாக்கம் சி.ராஜேந்திரன் Ex. எம்.பி. அவர்கள், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப. அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) முனைவர் ஹி. பசவராஜு, இ.வ.ப. அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் (வனத்துறைத் தலைவர்) திரு. பிரவீன் சந்திர தியாகி, இ.வ.ப. அவர்கள், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) திரு. சஞ்சய் குமார் ஸ்ரீவஸ்தவ, இ.வ.ப ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார்கள்.